


திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாமை கழக முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து முகாமில் பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார். விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், பேரூராட்சி துணை தலைவர் ஜோதி, பொதுக்குழு உறுப்பினர் பக்தவச்சலு, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அன்பழகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் இரா.கிருஷ்ணராஜ், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் சீனு.கவியவேந்தன், மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் சூர்யா அறக்கட்டளை கவின்பாலா ஏற்பாட்டில் ஈரோடு கலை அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவிகளுக்கு டி.என்.பி.எஸ்.சி. குரூப் தேர்வு பயிற்சி முகாமில் விவேகானந்தா பதிப்பகம் கிருபாகரன், வழக்கறிஞர் ஸ்டாலின் குணசேகரன் ஆகியோர் குருப் தேர்வு எழுதுவது குறித்து மாணவர்களிடம் விளக்கி பேசினார்கள். நிகழ்வில் கல்லூரி பேராசிரியர் இளம்பரிதி, பொதுக்குழு பல்கீஸ், இரா.நித்தின், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மதன்குமார், இளைஞரணி பகுதி துணை செயலாளர் சண்முகம், தினேஷ், அருள், ஆசிக், தஸ்தகீர், போட்டோ சுப்பு, சூர்யா, மாணவரணி சிவா (எ) மணிகண்டன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் .

### ஈரோடு மாவட்டம், எலத்தூர் ஏரி

# மாநிலத்தின் மூன்றாவது உயிரியல் பாரம்பரியத் தளம்!

## அமைச்சர் ஆர்.எஸ். இராஜ கண்ணப்பன் தகவல்!



சென்னை, செப்.3-

தமிழ்நாடு அரசு, உயிரியல் பன்மைச் சட்டம் 2002, பிரிவு 37(1)ன் கீழ், அரிட்டாபட்டியை நவம்பர் 2022 இல் பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டது மற்றும் காசம்பட்டி மார்ச் 2025 இல் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 37.42.50 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட ஈரோடு மாவட்டத்திலுள்ள எலத்தூர் ஏரியை மாநிலத்தின் மூன்றாவது உயிரியல் பாரம்பரியத் தளமாக அறிவித்துள்ளது.

இதற்கான அறிவிக்கையினை நேற்று முன்தினம் (01.09.2025) தலைமைச் செயலகத்தில், வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் வெளியிட்டார்.

இந்நிகழ்வில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு உயிர்ப் பல்வகைமை வாரியம், செல்வி மித்தா பானர்ஜி, சத்தியமங்கலம் மாவட்ட வன அலுவலர் யாகேஷ் குலால், சூழல் அறிவோம் வி. தீபக் மற்றும் பி. நாகராஜன், தலைவர், பல்லுயிர் மேலாண்மை குழு, எலத்தூர் பேரூராட்சி ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் இராஜ கண்ணப்பன் “எலத்தூர் ஏரியை தமிழ்நாட்டின் மூன்றாவது பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவிப்பதன் மூலம், அதன் உயிரினங்கள் மற்றும் வாழ்விடங்களின் செழுமையை மட்டுமல்லாமல், பல தலைமுறைகளாக இயற்கையுடன் ஒத்துழைந்து வாழ்ந்த உள்ளூர் சமூகங்களின் ஞானத்தையும் நாம் கொண்டாடுகிறோம்” என்றார்.

தமிழ்நாடு மாநிலத்தில் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்க பல்வேறு விரிவான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்தியாவில் அதிகபட்ச எண்ணிக்கையிலான ராம்சர் தளங்கள் அறிவிக்கப்பட்டது மற்றும் அழிந்து வரும் உயிரின பாதுகாப்பு நிதியை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் பல்லுயிர் பாதுகாப்பினை உறுதி செய்கிறது. இந்நிலையில், எலத்தூர் ஏரியை மூன்றாவது பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவித்தது இம்முயற்சியில் ஒரு மைல் கல் ஆகும்.

இந்த அறிவிப்பைப் பற்றி கருத்து தெரிவித்த திருமதி சுப்ரியா சாகு, “எலத்தூர் ஏரி என்பது ஆழமான நீர்நிலைகள், சேற்றுப் பள்ளத்தாக்குகள், புலம்பெயர்ந்த பறவைகள் மற்றும் சமூக மரபுகள் ஆகியவற்றின் துடிப்பான நீர்நிலை ஆகும். இது இயற்கை மற்றும் மக்களின் மீள்தன்மைக்கு ஒரு உண்மையான சான்றாகும். இதை ஒரு பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவிப்பது, பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் கைகோர்த்துச் செல்வதை உறுதி செய்யும் அதே வேளையில், அழியும் நிலையில் உள்ள உயிரினங்கள், சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதில் தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. இந்த நடவடிக்கை கட்டுப்பாடுகள் பற்றியது அல்ல, மாறாக அதிகாரமளித்தல், விலைமதிப்பற்ற பாரம்பரியத்தின் பாதுகாவலர்களாக உள்ளூர் சமூகங்களுக்கு அங்கீகாரம் பற்றியது. பல்லுயிர் பாதுகாப்பில் தமிழ்நாடு தொடர்ந்து தலைமைத்துவத்தைக் காட்டியுள்ளது, மேலும் எலத்தூர் இந்தப் பயணத்தில் சேருகிறது, இந்த ஏரியின் அதிசயங்கள் வரும் தலைமுறையினர் அறிந்துகொள்ளவும் கொண்டாடப்படுவது மற்றும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது.”

ஏற்கனவே அரிட்டாப்பட்டி 21.11.2022லும் அதனைத் தொடர்ந்து காசம்பட்டி 12.03.2025லும் அறிவிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டன.

பல்லுயிர் பாரம்பரிய தளங்கள் சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், தனித்துவமான மற்றும் அழியக்கூடிய நிலையில் உள்ள உயிரினங்களுக்கான சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு தாயகமாகும். அவை அரிய, அச்சுறுத்தலுக்கு உள்ளான மற்றும் முக்கிய உயிரினங்களைப் பாதுகாக்கின்றன, பரிணாம முக்கியத்துவத்தைப் பாதுகாக்கின்றன, மேலும் இயற்கையுடனான கலாச்சார உறவுகளை வலுப்படுத்துகின்றன. உயிரியல் பாரம்பரியத் தள அங்கீகாரம் உள்ளூர் சமூகங்களிடையே பெருமையை வளர்க்கிறது, பாதுகாப்பு நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையுடன் பாரம்பரிய வாழ்வாதாரங்கள் செழித்து வளர்வதை உறுதி செய்கிறது.

**சுற்றுச்சூழலின் சமநிலை**

முக்கியமாக, உயிரியல் பாரம்பரியத் தளம், உள்ளூர் சமூகங்களின் பாரம்பரிய நடைமுறைகள் அல்லது பழக்கவழக்கங்களை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தப்படுவதில்லை. மாறாக, இது சுற்றுச்சூழலின் சமநிலையை மேம்படுத்துகிறது மற்றும் வாழ்க்கை தரத்தை உயர்த்துகிறது.

எலத்தூர் ஏரி ஒரு பரிணாம சூழலியல் முக்கியத் தளமாகவும், புலம்பெயரும் மற்றும் இடம்பெயராத பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் பல்வகை ஈர நில அமைப்புகளுக்கு முக்கிய வாழ்விடமாகவும் விளங்குகிறது. இதன் ஆழமான நீர்ப்பரப்புகள், அடர்த்தியான கரைகள், சளிக்காடுகள் மற்றும் கற்களால் ஆன பகுதியில் காணப்படும் இயற்கைக் காட்சிகள், செழுமையான உயிர்பல்வேறு தன்மையைத் தாங்கிக் கொண்டுள்ளன.

புலம்பெயர்ந்துவரும் பருவங்களில் சுமார் 5,000 பறவைகள் எலத்தூர் ஏரியில் கூடுகின்றன. இந்த ஏரி, ஆபத்தான நிலையில் உள்ள ஸ்டெப்ப் ஈகிள், இரண்டு அழியும் நிலையில் உள்ள உயிரினங்கள் (நதிக்காக் மற்றும் பெரிய புள்ளி ஈகிள்) மேலும் ஐந்து உயிரினங்களான (ஆசிய கம்பளக்கழுத்து நாரை, சிவந்த கழுத்து பறவைகள், ஓவிய நாரை, கிழக்கு நீர்த்தாரை மற்றும் கருந்தலை வெண்ணாரை) ஆகியவற்றைப் பாதுகாக்கும் இடமாக உள்ளது. மொத்தமாக, இங்கே 187 வகையான பறவைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இங்கு காணப்படும் முக்கிய பறவை இனங்கள் பின்வருமாறு நார்தெர்ன் பின்டெய்ல், கர்கனேய் (Garganey), வாக்டெயில்கள் (Wagtails), சாண்ட்பைபர்கள் (Sandpipers), வார்பிளர்கள் (Warblers), பார்ஹெடெட் கூஸ் (Barheaded Goose), கிரீன்விங்க்டு டீல் (Green winged Teal), ஷவுலர் (Shoveler), விஜியன் (Wigeon) மற்றும் ஷ்ரைக் (Shrike)

எலத்தூர் ஏரியில் பதிவாகியுள்ள முக்கிய உயிரினங்கள் பின்வருமாறு: 38 தாவர வகைகள், 35 பட்டாம்பூச்சி வகைகள், 12 தட்டான் பூச்சி (Dragonflies), 12 இழைச் சிட்டிகள் (Damselflies), 12 ஊர்வன (Reptiles), 7 பாலூட்டிகள் (Mammals), நீர்நில வாழ்வன (Amphibians), மீன்கள் மற்றும் முது கெலும்பில்லா பிராணிகள் (Invertebrates)

மேலும், எலத்தூர் ஏரி ஒரு உயிரியல் பரம்பரை மையமாக (genetic diversity) செயல்பட்டு, பருவநிலை மாற்றத்தினை தழுவும் திறனையும் நிலைத்தன்மையையும் வழங்குகிறது.

2025ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் தேதி, எலத்தூர் நகர பஞ்சாயத்து இந்த அறிவிப்பை ஆதரித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது, இது உள்ளூர் பாதுகாப்புப் பண்புகளின் வலிமையை வெளிப்படுத்துகிறது. இதனைத் தொடர்ந்து, 28 01.2025ம் நாளிட்ட கடிதத்தில் இந்த அறிவிப்புக்கு மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கினார்.

ஏரியின் பாதுகாப்பு சுற்றுச்சூழல் நன்மைகளை மட்டுமல்லாது, இந்த சூழலியலுடன் நெருக்கமாக தொடர்புடைய பண்பாட்டு மரபுகள் மற்றும் பாரம்பரியத்தையும் பாதுகாக்கிறது.

எலத்தூர் ஏரியை ஒரு உயிரியல் பாரம்பரியத் தளமாக அறிவிப்பதன் மூலம், தமிழ்நாடு, பாதுகாப்பு மற்றும் நிலைத்த பாரம்பரிய மேலாண்மையில் தனது தலைமைப் பங்கை வலுப்படுத்துகிறது.

இந்த அங்கீகாரம், எலத்தூர் ஏரியின் உயிர்பல்வேறு தன்மை, பரிணாம பங்கு மற்றும் பண்பாட்டு முக்கியத்துவங்களை பாதுகாக்கின்றது, இது எதிர்கால தலைமுறைகளுக்கு ஒரு மரபுரிகை பண்பாகத் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### இளையான்குடி அருகே

# முன்னாள் ராணுவ வீரர் குணசேகரன் மறைவு!

## திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் கே.என்.நேரு - கே.ஆர்.பெரியகருப்பன் மலரஞ்சலி!

சிவகங்கை .செப். 3-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா விஜயன்குடி ஊராட்சி நல் கிராமத்தைச் சேர்ந்தவர் குணசேகரன். வயது 36 .இவர் ராணுவத்தில் காஷ்மீர் பகுதியில் படைவீரராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

உடல்நலக்குறைவினால் சிகிச்சைக்காக பெங்களூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை முடிந்து திடீரென்று ஏற்பட்ட உடல்நலக்குறைவினால் இயற்கையெய்தினார். இறந்து போன குணசேகரன் உடல் அவர் சொந்த ஊரான நல்கிராமத்தில் அரசுமரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. மறைந்த குணசேகரனின் நல் கிராமத்திற்கு நேற்று முன் தினம் மாலை அவரது வீட்டில் குணசேகரன் திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், கே.என்.நேரு, திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ ஆகியோர் மலர் மாலை வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். முன்னாள் ராணுவ வீரர் குணசேகரன் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் கா.வெங்கட்ராமன், வே.தமி ழ்மாறன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### விஜயகுமார் தலைமை! செஞ்சி ஒன்றியம்

# மழவந்தாங்கல் ஊராட்சியில்“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, செப். 3-

செஞ்சி ஒன்றியம் மழவந்தாங்கல் ஊராட்சியில் நடைபெற்ற “ உங்களுடன் ஸ்டாலின் “திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்.ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மழவந்தாங்கல் ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம்முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜ், பிரபா சங்கர் ஆகியோர் முன்னிலையில் வைத்தனர் .ஊராட்சி மன்ற தலைவர் அம்பிகா அய்யனார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அனைத்து துறை சார்பில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

முன்னதாக மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவ துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தனையும்,ரத்த அழுத்தம்,நீரழிவு நோய், சர்க்கரை,நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துமாத்திரை பெட்டகத்தினையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்.

முகாமில் மழவந்தாங்கல், பழவலம் ஆகிய கிராமங்களிலிருந்துஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா,ஒன்றிய கவுன்சிலர்பூங்காவனம் ராமசாமி,ஊராட்சி மன்ற தலைவர் பழவலம் சேகர் ,துணைத் தலைவர் செந்தில் குமார்,நிர்வாகிகள் வாசு, திருநாவுக்கரசு, அய்யாதுரை, சிவப்பிரகாசம், திருமாவளவன், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அபிராமிஅனைவருக்கும் நன்றி கூறினார்.

### மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி.யைச் சந்தித்து

# பெரம்பலூர் மாவட்ட பத்திரிகையாளர்கள் சங்க நிர்வாகிகள் வாழ்த்துப் பெற்றனர்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், செப் . 3 -

பெரம்பலூர் மாவட்ட பத்திரிகையாளர்கள் சங்கத்தின் மாவட்ட தலைவராக ஜோ.வில்சன், மாவட்டச் செயலாளராக எஸ். கே. செந்தில்முருகன், மாவட்ட பொருளாளராக மு.செல்வராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இதையடுத்து அவர்கள் பெரம்பலூர் மாவட்ட கழக அலுவலகத்தில், மேனாள் ஒன்றிய அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி.யைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். பெரம்பலூர் மாவட்ட பத்திரிகையாளர்கள் சங்கத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் அனை வருக்கும் ஆ.இராசா எம்.பி. வாழ்த்துத் தெரிவித்தார்.அப்போது மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபா கரன், சங்க ஆலோசர் ரா.குருராஜன் மற்றும் பெரம்பலூர் மாவட்ட பத்திரிகையாளர்கள் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, விழுப்புரம் நகரம், 11, 25 வார்டுகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து, சிறப்புரையாற்றினார். மாவட்ட சிறுபான்மையினர் அணி தலைவர் தாஹிர், நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ.மணிகண்டன், நகர் மன்ற உறுப்பினர்கள் உஷாராணி மோகன், புல்லட் மணி, சாந்தராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மழவந்தாங்கல் ஊராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்துகர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகத்தினை வழங்கினார். உடன்ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், நெடுஞ்செழியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளனர்.